**இலங்கை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு மங்கள சமரவீர, பா.உ. அவர்களினால் ஆற்றப்பட்ட உரை**

**2015 செப்டம்பர் 14ஆந் திகதியன்று ஜெனீவா ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் மன்றத்தின் 30வது அமர்வின் போது இடம்பெற்ற பொது விவாதம்**

தலைவர் அவர்களே!
மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளர் அவர்களே!
அதிமேதகையீர்களே!
மேன்மைமிக்க பேராளர்களே!

28வது அமர்வில் இலங்கை மீது வைக்கப்பட்டுள்ள நம்பிக்கைக்காகவும் இலங்கை மீதான மனித உரிமைகள் பற்றிய உயர் ஆணையாளர் அலுவலகத்தின் இலங்கை மீதான விசாரணை அறிக்கையின் வெளியிடுகையைப் பிற்போடுவதற்கு உடன்பட்டமைக்கு தங்களுக்கும் இம்மன்றத்தின் உறுப்பினர்களுக்கும் நான் நன்றியைத் தெரிவித்து எனது உரையை நிகழ்த்த விரும்புகின்றேன்.

இம்மன்றத்தினால் வழங்கப்பட்ட கால அவகாசம், அரசாங்கத்திற்கு அதன் சீர்திருத்த நிகழ்ச்சி நிரலை நடைமுறைப்படுத்துவதற்கும் மனித உரிமைகள் உயர் ஆணையாளரையும் அவருடைய அலுவலகத்தையும் உள்ளடக்கி சருவதேச சமூகத்துடன் அதன் ஈடுபாட்டைப் புதுப்பிப்பதற்கும் அநேக ஆண்டுகளாக மோதலினால் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்குமிடையே அர்த்தமுள்ள நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதை ஆரம்பிப்பதற்கும் சனநாயக நிறுவனங்களையும் நல்லாட்சியையும் சட்ட ஆட்சியையும் நம்பிக்கையையும் கட்டியெழுப்புவதற்கும் மிகவும் தேவைப்பட்ட கால அவகாசத்தை வழங்கியுள்ளது.

தலைவர் அவர்களே!

கடந்த ஆண்டில் நடாத்தப்பட்ட பாராளுமன்றத் தேர்தலில் நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணியினால் ஈட்டப்பட்ட வெற்றியானது சனாதிபதி சிறிசேன அவர்களினாலும் பிரதம அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அவர்களினாலும் தேசிய ஐக்கிய அரசாங்கமொன்று உருவாக்கப்படுவதை இயலுமானதாக்கியுள்ளது. இதன் காரணமாக இலங்கை அரசியலில் பாரம்பரிய போட்டியாளர்களாகிய ஐக்கிய தேசியக்கட்சியும் இலங்கை சுதந்திரக் கட்சியும் ஒன்றிணைந்து இந்நாட்டில் ஓர் புதிய உடன்பாட்டு அரசியல் கலாசாரத்தை முன்னறிவித்துக் கொண்டு மிகவும் தேவையானதாகவுள்ள அரசியல் நிலைபேற்றையும் கொள்கை நிலைபேற்றையும் உருவாக்கியுள்ளன.

ஆகஸ்ட் 17ஆந் திகதியில் இடம்பெற்ற தேர்தலில் சட்டவாக்க மன்றத்திற்கு நடுநிலைமையாளர்கள் திரும்பவும் அதிகாரத்திற்கு வருவதில் வெற்றி பெற்றமையும் இரு பக்கங்களிலுமுள்ள கடும்போக்குடைய தீவிரவாதிகள் படுதோல்வி அடைந்தமையும் ஓர் முக்கியமான அமிசமாகும். இதன் விளைவாக பாராளுமன்றத்தில் மிதவாதிகள் திரும்பவும் அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ளமை முன்னேற்றகரமான சீர்திருத்தத்திற்கு நல்ல செய்தியாகியுள்ளது. இது சமூகங்களுக்கிடையே நல்லிணக்கத்தை வளர்த்தெடுப்பதன் மூலம் சமத்துவம், நீதி, சுதந்திரம் ஆகியவற்றின் சருவதேச மதிப்பினை உறுதிப்படுத்துகின்றது.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் செப்டம்பர் 01ஆந் திகதியன்று 8வது பாராளுமன்றத்தின் அங்குரார்ப்பண வைபவத்தில் சனாதிபதி சிறிசேன அவர்கள் தென் ஆபிரிக்காவை ஓர் உதாரணமாகக் குறிப்பிட்டுள்ளார். தென்ஆபிரிக்காவில் பிரதான அரசியல் கட்சிகள் அந்நாட்டின் வரலாற்று ரீதியான காலப்பகுதியில் ஒன்று சேர்ந்துள்ளன. அவர் அதைப் போலவே இலங்கையின் போருக்குப் பின்னரான காலப்பகுதியில் இலங்கையில் நல்லிணக்கமும் சமாதானமும் கட்டியெழுப்பப்படுவதை உள்ளடக்கி எமது நாட்டிற்கு முன்னுள்ள முக்கியமான சவால்களை எதிர்நோக்குவதற்குத் தேவையான இருதரப்பு உடன்பாட்டைப் பெற்றுக் கொள்வதன் பொருட்டு தேசிய ஒற்றுமையின் உருவாக்கம் அவசியமானது என்பதை வலியுறுத்திக் குறிப்பிட்டுள்ளார்.

நல்லாட்சி நடைமுறைகளை ஏற்றுக் கொண்டு பாராளுமன்றமானது செப்டம்பர் 01ஆந் திகதியன்று தேர்தலில் மூன்றாவது ஆகக்கூடிய எண்ணிக்கை உறுப்பினர்களைப் பெற்றுள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவராகிய திரு. ஆர். சம்பந்தன் அவர்களை சரியான முறையில் எதிர்க்கட்சித் தலைவராக நியமித்துள்ளது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கப்பட்டமையும் சனவரி மாதத்தில் இலங்கையின் 44வது பிரதம நீதியரசர் நியமிக்கப்பட்டமையும் புதிய இலங்கையில் இனம், சமயம், வகுப்பு அல்லது பால் ஆகியன சிறுபான்மை மக்கள் உரிய சரியான இடத்தில் வைக்கப்படுவதை மறுதலிப்பதற்காகப் பயன்படுத்தப்பட மாட்டா என்பதைத் தெளிவாகக் காண்பிக்கின்ற விடயங்களாகியுள்ளன.

தலைவர் அவர்களே!

2009 மே மாதத்திலிருந்து மோதல் முடிவுற்றமையை உடனடியாகத் தொடர்ந்து பின்பற்றப்பட்ட குறுகிய மனப்பான்மையுடைய கொள்கைகள் மற்றும் வெற்றி பெற்ற இறுமாப்பு ஆகியவற்றின் பெறுபேறு எம்மை மழுப்பல் நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது. தற்போது தேசிய ஐக்கிய அரசாங்கமானது அவசர முன்னுரிமை விடயமொன்றாக நல்லிணக்கத்தை புதிதாக அணுகுகின்றது.

தனது மக்களுக்கு பொறுப்புடையதும் பொறுப்புக் கூறவேண்டியதுமாகவுள்ள ஓர் அரசாங்கமாக தேசிய ஐக்கிய அரசாங்கமானது நேரகாலப்பகுதியில் எக்கட்டத்திலும் சருவதேச சமூகத்திற்கு வழங்கியுள்ள வாக்குறுதிகளுக்கு மட்டுமன்றி, நீதியை உறுதிப்படுத்துவதற்கும் பயங்கரவாதத்திற்கான காரணங்களை அகற்றுவதற்கும் எமது நாட்டில் நீண்ட காலமாக துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும் மக்களுக்கு நிலையான சமாதானத்தைப் பெற்றுக் கொடுப்பதற்குமாக இந்நாட்டின் மக்களுக்காக சரியான செயற்பாட்டை மேற்கொள்ள வேண்டுமென்ற தீர்மானத்தில் மிகவும் உறுதியுடன் இருக்கின்றது.

தலைவர் அவர்களே!

தாங்கள் நல்லிணக்கம் என்பது ஓர் நடைமுறை என்பதையும் அதை எய்துவதற்கு காலம் எடுக்கும் என்பதையும் ஒத்துக் கொள்வீர்கள். பலர் பொறுமையில்லாத நிலையில் இருக்கின்றனர் என்பதையும் நான் அறிவேன். அவர்களுடைய பொறுமையின்மையையும் அவ்வண்ணம் இருப்பதற்கு அவர்களுக்கு உரிமையுள்ளது என்பதையும் நாம் புரிந்து கொள்கின்றோம். எனினும் இந்த நடைமுறையானது கவனமாகத் திட்டமிடப்படல் வேண்டும். சுதந்திரம் பெற்றதன் பின்னர் எமது மக்கள் அநேக தடவைகளில் தவறுகளை இழைத்துள்ளனரென்பதுடன் நாம் திரும்பவும் ஓர் முறை பிழை விடுவதைத் தாங்கிக் கொள்ள முடியாது.

தலைவர் அவர்களே!

இலங்கை அரசாங்கம், நல்லிணக்க நடைமுறையானது உண்மையைத் தேடுதல், நீதி, ஈடு செய்தல்கள், மீண்டும் அநீதி நிகழாமல் பார்த்துக் கொள்ளுதல் ஆகிய பரந்த துறைகளுக்குக் கவனம் செலுத்துவதைச் சம்பந்தப்படுத்துகின்றதுடன் இவை மீண்டும் நிகழாமல் பார்த்துக் கொள்ளுதல் உண்மையில் அர்த்தமுடையதாகவிருக்க வேண்டுமேயானால் தமிழ் மக்களின் மனக்குறைகளை நிவர்த்தி செய்கின்ற அரசியல் தீர்வொன்றை அடைய வேண்டிய தேவை உள்ளது என்பதை முழுமையாக ஏற்றுக் கொள்ளுகின்றது.

மக்களினால் வழங்கப்பட்டுள்ள பணிப்பாணையுடன் சனாதிபதியும் பிரதம அமைச்சரும் அரசாங்கமும் அரசியல் தீர்வொன்றைக் குறிக்கோளாகக் கொண்டுள்ள கலந்துரையாடலை ஆரம்பிப்பதற்காக சில முக்கியமான நடவடிக்கைகளை ஏற்கனவே எடுத்துள்ளனர்.

2015 சனவரி வரையுள்ள சனாதிபதி சிறிசேன அவர்களின் விஞ்ஞாபனத்தின் 93ஆம் விடயத்தலைப்பில் பொது வேட்பாளர் தெரிவு செய்யப்படுமிடத்து தேசிய சுதந்திர நீதிப் பொறி முறைகள் மூலமாக பொறுப்புக்கூறல் விடயங்களுக்கு கவனம் செலுத்தி அவற்றிற்குத் தீர்வு காணும் நோக்கத்தை அதில் தெரிவித்துள்ளார்.

நீதி முறைமையில் எமது சகல சமூகங்களையும் சேர்ந்த மக்களுக்காக சட்ட ஆட்சியை நிலைநிறுத்துவதற்கும் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கும் பொறுப்புக் கூறல் அத்தியாவசியமானதாகும். இந்த நடைமுறையில் நீதிச் சீர்திருத்தம் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம் ஆகியவற்றின் முக்கியத்துவத்தையும் நாம் முழுமையாக ஏற்றுக் கொள்ளுகின்றோம். இவை பொறுப்புக் கூறல் மற்றும் சட்டம் ஆட்சி ஆகியவற்றின் கலாசாரத்தின் பொருட்டு கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய அத்தியாவசியமான காரணிகளாகும். இவை பல ஆண்டுகளின் போக்கில் வன்செயலின் காரணமாக அரிக்கப்பட்டதுடன் எமது சமூகத்தில் திரும்பவும் மீளவும் ஆழமாக பதிக்க வேண்டியனவாகவும் உள்ளன. மனித உரிமைகளின் மீறுகைகளுக்கு மட்டுமன்றி ஊழல் மற்றும் பிற குற்றங்களுக்கும் தண்டனையிலிருந்து விலக்களிப்பதைத் தடைசெய்ய வேண்டியுள்ளமையின் முக்கியத்தவத்தையும் நாம் ஏற்றுக் கொள்ளுகின்றோம். அத்துடன் எமது நாட்டின் நீண்ட கால அபிவிருத்திக்கும் எதிர்காலச் சந்ததிகளையும் உள்ளடக்கி எமது பிரசைகளினால் உணரப்பட வேண்டிய சமாதானப் பங்கிலாபத்திற்கும் இந்த நடைமுறைகள் மிகவும் முக்கியமானவைகள் என்பதையும் நாம் ஏற்றுக் கொள்ளுகின்றோம். இவை பிற நாடுகளின் அனுபவங்களிலிருந்து மட்டுமன்றி எமது சொந்த வரலாற்றிலிருந்தும் சமீபத்திய கடந்த காலத்திலிருந்தும் நாம் கற்ற பாடங்களாகும்.

அரசியலமைப்பின் கட்டுக்கோப்பிற்குள் உண்மையை தேடுதலுக்கும் நீதி, ஈடுசெய்தல்கள், மீண்டும் நிகழாதிருப்பதற்கான உத்தரவாதங்களை வழங்குதல் ஆகியவற்றுக்காக சுதந்திரமான, நம்பத் தகுந்த, அதிகாரமளிக்கப்பட்ட பொறிமுறைகளை நிறுவுவதற்கு அரசாங்கம் உருவாக்கியுள்ள யோசனைகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளன;

**உண்மையைத் தேடுவதற்கு** நியதிச் சட்டத்தினால் பின்வரும் இரண்டு பொறிமுறைகளை நிறுவுதல்:

(i) தென் ஆபிரிக்காவின் இயைபுள்ள அதிகார பீடங்களுடன் கலந்துரையாடலைச் செய்து உண்மை, நீதி, நல்லிணக்கம், அநீதியான நிகழ்வுகள் மீள நிகழாமல் இருப்பதற்கான ஆணைக்குழுவொன்றை நிறுவுதலுடன், இப்பொறிமுறையானது பின்வரும் இரட்டைக் கட்டமைப்பொன்றை வைத்திருக்குமென முன்னடியாகக் கருதப்படுகின்றது. அதாவது இந் நாட்டிலுள்ள சகல பெரிய சமயங்களையும் சேர்ந்த சமயத் துறையிலுள்ள மேன்மை

தங்கியோர்களைக் கொண்டிருக்குமென்பதுடன் ஆணையாளர்களைக் கொண்ட ஓர் கட்டமைப்பையும் கொண்டிருக்கும். எந்த சமூகத்தையும் சேர்ந்த மனித உரிமைகளின் துஷ்பிரயோகங்களுக்கும் ஆளான அநேக பாதிக்கப்பட்டவர்களின் விடயத்தில் குற்றமிழைத்தவர்களைக் கையாளுவதற்குத் தெளிவான நீதிப் பொறிமுறை இல்லாத விடயத்தில் அல்லது அரசாங்கத்தினதும் சமூகத்தினதும் நடைமுறைகள் பாரபட்சமான வேற்றுமை காட்டப்படும் விளைவை ஏற்படுத்தினால் இந்த ஆணைக்குழுவானது உண்மையைக் கண்டறிவதற்கும் என்ன நடந்தது என்பதை அறிந்து கொள்வதற்கும் அநீதி உணர்வு இருக்குமிடத்து நிவர்த்தி வழங்குவதற்கு உதவியளிப்பதற்கும்;

(ii) காணாமல் போனோர்களின் தொடர்பில் அவர்களுடைய குடும்பத்தவர்கள் அது பற்றித் தெரிந்து கொள்ளும் உரிமை உள்ளது என்ற கோட்பாட்டின் அடிப்படையில் நியதிச் சட்டத்தினால் செஞ்சிலுவைச்சங்கத்தின் நிபுணத்துவத்துடனும் சருவசேத ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட நியமங்களுக்கு அமைவாகவும் காணாமல் போனோர்கள் அலுவலகமொன்றை நிறுவுவதற்கும்.

- **<u>நீதி உரிமை குறித்து,</u>** முன்மொழிவு செய்யப்படும் யோசனை என்னவெனில் நியதிச்சட்டத்தினால் விசேட சட்டவுரைஞர்களுடன் நீதிப் பொறிமுறையொன்றை நிறுவுவதாகும். இது நியாயமான நிவாரணமொன்றைப் பெறுவதற்கான பாதிக்கப்பட்டவர்களின உரிமையைக் கணக்கிற்கு எடுத்துக் கொள்வதுடன் சகல சமூகங்களாலும் அனுபவிக்கப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான கண்டனப் பிரச்சினைக்கு நிவாரணமளிக்கும் நோக்கத்தைக் கொண்டுள்ளது. இலங்கையில் முன்னைய சந்தர்ப்பங்களில் வெவ்வேறு வகைக் குற்றவியல் நீதிப் பொறிமுறைகள் நிறுவப்பட்ட போது நிகழ்வுகள் சம்பவித்துள்ளன. எனவே இது ஓர் பிற நாட்டிற்குரிய கருதுகோள் அல்ல. இது ஒரு குறிப்பிட்ட தொகுதி நபர்களுக்குக் குறிவைக்கப்பட்டதும் அல்ல. ஆனால், இது சட்ட ஆட்சியைத் தக்கவைத்திருக்கும் நியதிகளின் பிரகாரம் அத்தியாவசியமானதாகவிருப்பதுடன் சட்ட ஆட்சியை மதிக்கின்ற சமூகமொன்றை உருவாக்கும் ஒன்றாகவுமுள்ளது.

- **ஈடுசெய்தல்கள் மீதான உரிமை,** முன்மொழிவு செய்யப்பட்ட உண்மை, நீதி, நல்லிணக்கம், மீள நிகழாமை மீதான ஆணைக்குழுவினாலும் காணாமற் போனோர்கள் பற்றி அலுவலகத்தினாலும் கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினாலும் பிற எந்த நிறுவனத்தினாலும் ஈடுசெய்தல்கள் தொடர்பிலான சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவதற்கு வசதியளிப்பதன் பொருட்டு நியதிச் சட்டத்தினால் ஈடுசெய்தல்களுக்கான அலுவலகமொன்று நிறுவப்படும்.

தலைவர் அவர்களே!

இது மீள நிகழாமல் இருப்பதற்கான உத்தரவாதத்தை வழங்குவதன் பொருட்டு நிருவாக மற்றும் நீதித் துறைச் சீர்திருத்தம் ஆகியவற்றையும் உள்ளடக்கி பல நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் புதிய அரசியலமைப்பொன்று உருவாக்கப்படுமெனவும் முன்மொழிவு செய்யப்படுகின்றது. வெறுப்பான உரை நிகழ்த்துதலையும் வலுக்கட்டாயப்படுத்தப்பட்ட காணாமற் போகச் செய்தல்களையும், குற்ற செயல்களாக்குவதன் பொருட்டு தண்டச் சட்டக் கோவையை திருத்துவதையும் உள்ளடக்கி பல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. தமிழ் மக்களின் மனக் குறைகளுக்கு நிவாரணம் அளிப்பதன் பொருட்டு அரசியல் தீர்வொன்று இருப்பது உண்மையிலேயே மீள் நிகழ்வு ஏற்படாமல் இருப்பதற்கான சிறந்த உத்தரவாதமாகும். நாம் புதிய அரசியலமைப்பொன்றை உருவாக்குவதன் மூலம் இதை அடைவதற்கு நம்பிக்கை கொண்டுள்ளோம். விரைவில் இந்நோக்கத்திற்காக ஓர் பாராளுமன்ற அரசியலமைப்பு பேரவை நிறுவப்படும்.

தலைவர் அவர்களே!

இப்பொறிமுறைகள், பாதிக்கப்பட்டவர்களையும் சகல பங்குதாரர்களையும் உள்ளடக்கி பரந்தளவிலான கலந்துரையாடல்களைக் கொண்ட நடைமுறை மூலமாக உருவாக்கி வடிவமைக்கப்படும். மேலும் மனித உரிமைகள் உயர் ஆணையாளர் அலுவலகத்தையும் உள்ளடக்கி எமது சருவதேச பங்காளர்களிடமிருந்து நிதி, பொருண்மை மற்றும் தொழினுட்ப உதவியைப் பெறும் சுதந்திரத்தைப் பொறிமுறை ஒவ்வொன்றும் கொண்டிருக்குமென முன்னாடியாகக் கருதப்படுகின்றது.

மேலதிகமாக, அரசாங்கமானது பரிஸ் கோட்பாடுகளுக்கு (Paris Principles) அமைவாக, தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவை தாமதமின்றி பலப்படுத்துவதற்கும் வலுக்கட்டாயமாக காணாமல் போகச் செய்யப்படுதலிலிருந்து சகல நபர்களுக்கும் பாதுகாப்பு வழங்கும் சருவதேச உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கும், இறுதியில் ஒழிக்கப்படும் நோக்குடன் மரண தண்டப்பணம் மீதான சட்ட இசைவுத் தாமதத்தைப் பேணி வைத்திருப்பதற்கும் இம்மாத முடிவில் முன்னைய உடலகம மற்றும் பரணகம சனாதிபதி அறிக்கைகளை வெளியிடுவதற்கும், ஓர் தற்காலிக நிவாரண நடவடிக்கையாக, காணாமல் போனோர்களின் குடும்பங்களுக்கு வராமலிருத்தல் சான்றிதழ்களை வழங்குதலை ஆரம்பித்தல்; வர்த்தக நடவடிக்கைகளிலிருந்து இராணுவத்தினர்களை விடுவித்தல்; பாதுகாப்புத் துறையின் சீர்திருத்தத்தைப் பொறுப்பேற்றல்; 2015ஆம் ஆண்டிலும் அதற்குப் பிற்பட்ட ஆண்டுகளிலும் இலங்கைக்கு வருகை புரியுமாறு விசேட ஊடகத்துறைப் பத்திரிகையாளர்களை அழைத்தல்; சித்திரவதை, கற்பழிப்பு, பாலியல் வன்புணர்ச்சி மற்றும் ஏனைய மனித உரிமை மீறல்கள் ஆகியன தடைசெய்யப்பட்டுள்ளமையைப் பற்றியும் அவற்றிற்குப் பொறுப்பானவர்கள் விசாரணை செய்யப்பட்டு அவர்களுக்குத் தண்டனை வழங்கப்படும் என்பது பற்றியும் பாதுகாப்புப்படைகளின் சகல கிளைகளுக்கும் தெளிவான அறிவுறுத்துரைகள் வழங்கப்படும்; பயங்கரவாதத் தடைச்சட்டம் மீளாய்வு செய்யப்பட்டு இரத்துச் செய்யப்படும் என்பதுடன் அதற்கு சமகால சருவதேச அதிசிறந்த நடைமுறைகளுக்கு அமைவாக பயங்கரவாதத்திற்கு எதிரான சட்டவாக்கம் உருவாக்கப்பட்டு பதிலீடு செய்யப்படும். பொது மக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம் மீளாய்வு செய்யப்படும்; அத்துடன் இவ்வாண்டில் இயற்றப்பட்ட பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சி பாதுகாப்புச் சட்டம் மீளாய்வு செய்யப்படும். தேசிய ஐக்கிய மற்றும் நல்லிணக்க அலுவலகத்தினால் உள சமூகவியல் ஆதரவை வேண்டுகின்ற சமூகங்களுக்கும் நபர்களுக்கும் உளசமூகவியல் ஆதரவை வழங்குவதற்கும்கூட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக் கொண்டிருக்- கின்றன. சகல சமூகங்களையும் சேர்ந்த வெளிநாடுகளில் வதிகின்ற இலங்கையர்களை அரசாங்கத்தின் சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் நல்லிணக்க முயற்சிகளில் ஈடுபடுத்துவதிலும் அவர்களுடைய உதவியைப் பெறுவதிலும் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கும் பொறுப்பேற்பு முயற்சியை நாம் மிகவும் முக்கியமான விடயமாகக் கருதுகின்றோம். இத்தொடர்பில் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு மன்றத்தின் 1373 ஆம் தீர்மானத்தின் ஏற்பாடுகளின் கீழ் கடந்த ஆண்டில் 16 அமைப்புகளினதும் 424 நபர்களினதும் நிரற்படுத்தலின் மீளாய்வு தற்போது பூர்த்தியடையும் நிலையிலுள்ளது.

தலைவர் அவர்களே!

இலங்கையில் பயங்கரவாதத்தைக் தோற்கடிப்பது ஓர் தேவைப்பாடாகவிருந்தது. இன்று பகைமை ஒழிவுற்றதன் விளைவாக பயங்கரவாதத்திற்கான காரணங்களைப் பற்றி ஆராய்வதிலும் நாட்டைக் கட்டியெழுப்புவதிலும் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதிலும் நாம் கூடுதலான சுதந்திரமான நிலையிலுள்ளோம். கடந்த காலத்தில் எமது நாட்டின் ஆயுதப் படைகள் ஒழுக்கத்திலும்

தொழிலிலும் சிறந்து விளங்கியமைக்காகக் பாராட்டப்பட்டுள்ளனர். எனினும், பொறுப்பான பதவிகளில் இருந்த ஒரு சிலரினால் உருவாக்கப்பட்ட முறைமை மற்றும் கலாசாரத்தின் நிமித்தம் படைவீரர்களில் மிகப்பெரும்பான்மையினர்களின் நற்பெயர் மங்கச் செய்யப்பட்டுள்ளது.

எனவே, நான் பொறுப்புக்கூறல் நடைமுறை பற்றிய ஐயப்பாட்டைக் கொண்டுள்ளவர்கள் அனைவருக்கும் தயவு செய்து நீங்கள் பயப்பட வேண்டாம் என்று கூற விரும்புகின்றேன். இத்தன்மைவாய்ந்த நடைமுறையொன்று பாரபட்சமின்றி உரிய நடைமுறையைப் பின்பற்றி உண்மையிலேயே படைவீரர்களின் நற்பெயரை மீட்டு எடுப்பதற்கு உதவும் என்பதிலான உங்களுடைய நம்பிக்கையைப் பேணி வைத்திருங்கள்.

படைவீரர்களின் நம்பகத்தன்மையை நாம் பேணுகின்ற வேளையில் சமாதானத்தைப் பேணுதலிலும் மனிதாபிமான நடவடிக்கைகளிலும் குறிப்பிடத்தக்க அளவில் கூடுதலான ஈடுபாட்டைச் செலுத்துவதன் மூலம் உலகத்தில் சமாதானத்திற்கும் நிலைபேற்று நிலைக்கும் மேலும் கூடுதலான பங்களிப்பைச் செய்வதற்கு எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றோம். உண்மையிலேயே இலங்கை சமீபத்தில் சிவிலியன்களின் பாதுகாப்பு மீதான கிகாலி கோட்பாடுகளுக்கு கைச்சாத்திட்டுள்ளது.

தலைவர் அவர்களே!

இன்று, இலங்கையின் சமூகங்களுக்கிடையில் பாதிக்கப்பட்டவர்களின் துன்பங்களை ஏற்றுக் கொள்ளுகின்ற அரசாங்கமொன்றை வைத்திருக்கின்றோம்; இந்த அரசாங்கமானது கடந்த காலத்தில் இழைக்கப்பட்டுள்ள பிழைகளை ஏற்றுக் கொள்ளுகின்றதுடன் அது எமது நிறுவனங்களின் பலவீனங்களைப் பற்றிய விழிப்புணர்வைக் கொண்டிருக்கின்றது. இந்த அரசாங்கம் தனது சுயநல நோக்கங்களுக்காக இறைமை போன்ற கருதுகோள்களையும் கோட்பாடுகளையும் திரிபுபடுத்துவதன் மூலம் அந்த போர்வைக்குள் தன்னை மறைத்துக் கொள்ளும் முறையை நாடவில்லை. அதற்குப் பதிலாக, இந்த அரசாங்கமானத தனது பிரசைகள் அனைவரினதும் நலனோம்பலுக்குத் தன்னைத் திடமான ஈடுபடுத்திக் கொண்டிருப்பதுடன் அது கலந்துரையாடலைச் செய்வதற்கும் தேவைப்படுமிடத்து சருவதேச சமூகத்தின் உதவி மற்றும் துணைபுரிதலுடன் கஷ்டங்களையும் குறைபாடுகளையும் நிவர்த்தி செய்வதற்குமான திறந்த நிலையிலுள்ளது.

இலங்கை, நாடொன்றாகத் தன்னை மாற்றியமைப்பதற்கான அதன் திறமை மீது ஐயப்பாட்டை உடையவர்கள் பலர் உள்ளனர். இவர்கள் இலங்கையில் எப்போதும் நீதி நிலவமாட்டாது எனவும் சகல சமூகத்தவர்களும் சமமானவர்கள் எனக் கருதும் நிலை நிலவ மாட்டாது எனவும் கூறுகின்றனர். அவர்களுக்கு நான் கூறுவது என்னவெனில் சனவரி 8ஆம் திகதியன்று மக்களினால் எய்தப்பட்ட சாதனையைப் பாருங்கள் என்பதுதான். இத்திகதியில் சனநாயக வழிவகையின் மூலமாக எய்தப்பட்ட சாதனையானது எனது நாட்டின் சாத்தியத்தகவு எல்லைக்குள் இடம் பெற்றமை ஒரு சிலர் மட்டுமே நம்பிய விடயமாகவிருக்கும் அளவிற்கு இலங்கை மீது உலகம் நம்பிக்கையை இழந்திருந்தது. இச்சாதனையானது பாராளுமன்றத்திலுள்ள ஆசனங்களைப் பெறுவதற்குப் பிரிவினைவாதத்தைக் கொண்ட இரண்டு தரப்புகளிலுமுள்ள கடும் போக்காளர்கள் ஆகஸ்ட் 17ஆம் திகதியன்று தோல்வியுற்றதன் மீது மீளவும் புரியப்பட்டுள்ளது. எனவே, ஐயப்பாடுடையவர்களுக்கு நான் கூறுவது என்னவென்றால் கடந்த காலத்தின் முறிவடைந்த வாக்குறுதிகளினாலும் அனுபவங்களினாலும், வளைவுத் திருப்பங்களினாலும் எம்மைப்பற்றிய தீர்மானத்தை எடுக்காதீர்கள் என்பதேயாகும். எமது நம்பிக்கைகள் மற்றும் அபிலாசைகள் மூலமாக நாம் எமது எதிர்காலத்தை வடிவமைத்து வரைவிலக்கணப்படுத்தி உருவாக்குவோமாக. நாம் கடந்த காலத்தின் பயங்கள், தப்பெண்ணங்களினால் பின்தள்ளப்படாமல் இருப்போமாக. நாம் கனவு காண்பதற்கு பயப்படாத நிலையில் இருப்போமாக. எதிர்காலச் சந்ததிகளின் செலவில் நாம்

விரல்களைச் சுட்டிக்காட்டி குறிப்பாகக் குறைகூறி அரசியல் இலாபத்தை ஈட்டுவதற்கு எதிராக பிரச்சினைகளுக்கு தீர்வுகளைக் கண்டு பிடிப்பதை நோக்கமாகக் கொண்டு அர்த்தமுள்ள கலந்துரையாடலில் ஈடுபடுவதற்குப் பயமில்லாத நிலையில் இருப்போமாக.

இந்த முயற்சியில் நாம் சருவதேச சமூகத்தின் மட்டுமன்றி இலங்கையின் நேர்மையான மனப்பாங்குள்ள சகல பிரசைகளினதும் பொறுமையான புரிந்துணர்வை பெறும் பொறுப்பையும் அத்துடன் அதை வேண்டுகின்ற நிலையிலும் உள்ளோம். இப்பிரயாணத்தில் நாம் அவர்களுடன் கையோடு கைகோர்த்து நடப்பதற்கு அவர்களுடைய புரிந்துணர்வையும் உதவியையும் நாடுகின்றோம்.

இப்பிரயாணமானது சிலர் வேண்டுகின்ற விதத்தில் வேகமானதாக இல்லாமலிருக்கலாம். சிலர் நாம் பிரயாணத்தில் நீண்ட தூரத்திற்கு முன்னேறவில்லை என நினைக்கலாம். ஆனால், சனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களும் பிரதம அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அவர்களும் இந்த நாட்டை அறியாமை, பயம், தப்பு அபிப்பிராயம், வெறுப்பு ஆகிய தடைகளை உடைத்து நாம் முன்னெடுத்துச்செல்வதை உறுதிப்படுத்துவதற்கான அரசியல் உறுதிப்பாட்டையும் தீர்மானங்களையும் எடுக்கும் துணிவையும் கொண்டுள்ளனர்.

பெண்மணிகளே! கனவான்களே! எனது வேண்டுகோள் என்னவெனில், எம்மீது நீங்கள் நம்பிக்கை வைத்து புதிய இலங்கையொன்றை உருவாக்குவதற்கு முன்னோக்கிச் சென்று முன்னேற்றகரமானவைகளும் அர்த்தமுள்ளவைகளும் மாற்றமானவைகளுமான நடவடிக்கைகளை எடுப்பதற்குமாக எங்களுடன் இணைந்து பணியாற்றுங்கள் என்பதேயாகும்.

நன்றி.